குழந்தைகளுக்கு மோதிரமும் சீரும் வேண்டாம்! முதலில் பாதுகாப்பைக் கொடுங்கள்!

பொய் வழக்குகளைக் காட்டி தி.மு.க.வினரை அச்சுறுத்த முடியாது!

முன்னாள் அமைச்சர் பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. பேச்சு!

சென்னை, நவ. 1- விலைவாசி உயர்வு, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றச்சம்பவங்கள், சட்டம்-ஒழுங்கு சீர்கேடு மற்றும் போதைப்பொருள் புழக்கத்தைக் கண்டித்து, சென்னை கிழக்கு-வடக்கு, வடகிழக்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி சார்பில், சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே நேற்று (31.10.2026) மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. அவர்கள் பங்கேற்று கண்டனப் பேருரையாற்றினார்.

மகளிர் தொண்டரணி அமைப்பாளர் ராஜேஸ்வரி ஸ்ரீதர் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சருமான பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ., சென்னை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் ஆர்.டி. சேகர், சென்னை வடகிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக்கணக்கான பெண்கள் கருப்பு உடையணிந்து கலந்துகொண்டு, அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வை எடுத்துக் காட்டும் வகையில் மாதிரிப் பொட்டலங்களை உயர்த்திப் பிடித்து, தமிழக அரசுக்கு எதிராகக் கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

தொடக்கத்தில் கழக இளம் பேச்சாளர் ஆர். வனிதா குமாரி பேசினார்.

பெப்பர் ஸ்ப்ரேவை உயர்த்திக் காட்டிய பெண்கள்!

கனிமொழி எம்.பி. அவர்களின் உரையின் நிறைவில், தாம்பாளத்தில் வைக்கப்பட்டிருந்த பெப்பர் ஸ்ப்ரே ஆர்ப்பாட்டத்தில் எடுத்துக்காட்டப்பட்டது. அதனைத் தொடர்ந்து மகளிர் அணியினர் பெப்பர் ஸ்ப்ரேவை உயர்த்திப் பிடித்து, பெண்களின் பாதுகாப்பை வலியுறுத்திக் கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தின் நிறைவில் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. பேசியதாவது:

"கனிமொழி அம்மையாருக்கு ஏழரை நாட்டுச் சனியில் நம்பிக்கை இருக்கிறதோ இல்லையோ, எங்களைப் போன்றவர்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. இப்போது தமிழகத்திற்கே ஏழரை நாட்டுச் சனி பிடித்துள்ளது.

ஆமை புகுந்த வீடும், அமீனா புகுந்த வீடும் ஒன்று என்பார்கள். அதுபோல முதலமைச்சர் ஜோசப் விஜய் ஆய்வுக்குச் சென்ற இடங்களிலெல்லாம் பிரச்சினைகள் அதிகரித்துள்ளன.

மின்சார வாரியத் தலைமை அலுவலகத்திற்கு ஆய்வுக்குச் சென்றார். அன்று முதல் மின்சாரப் பிரச்சினைகள் தலைவிரித்தாடுகின்றன. சிறைச்சாலைக்கு ஆய்வுக்குச் சென்றார். அதன் பின்னர் இதுவரை 50 கைதிகள் தப்பியதாகக் கூறப்படுகிறது. ஆவின் பாலகத்திற்கு ஆய்வுக்குச் சென்றார். அதன் பின்னர் ஆவின் பால் பொருட்களின் விலைகள் உயர்ந்துவிட்டன.

அவர் ஆய்வுக்குச் சென்ற இடங்களிலெல்லாம் மக்கள் சந்திக்கும் பிரச்சினைகள்தான் அதிகரித்துள்ளன!

அமைச்சர் நிர்மல்குமார் சட்டமன்றத்தில் தார்ப்பாயில் வடிகட்டிய பொய்களைப் பேசுகிறார். மின்சாரக் கொள்முதல் விலை ரூ.35-லிருந்து ரூ.41 ஆக உயர்ந்துள்ளதாகவும், அரசு வழக்கறிஞர்கள் நியமனத்தில் முறைகேடுகள் நடைபெறுவதாகவும் குற்றச்சாட்டுகள் எழுகின்றன. இவற்றுக்கெல்லாம் பதில் சொல்லாமல் எங்கள் கழகத் தலைவரைப் பழித்துப் பேசுவதற்கு அவருக்கு என்ன தகுதி இருக்கிறது?

திராவிட முன்னேற்றக் கழகம் எத்தனையோ அடக்குமுறைகளையும் பொய் வழக்குகளையும் சந்தித்து வளர்ந்த இயக்கம். உங்கள் வழக்குகளைக் காட்டி எங்களைப் பணிய வைக்க முடியாது! கைது நடவடிக்கைகளால் எங்களை அச்சுறுத்த முடியாது!

இன்று கழகத் தலைவர் சுட்டிக்காட்டும் திசையில் பாய்வதற்குத் தயாராக ஆயிரக்கணக்கான சிங்கப் பெண்கள் அணிவகுத்து நிற்கிறார்கள். இந்த மகளிரின் எழுச்சி வரும் மாதங்களில் இருமடங்காக, பல மடங்காகப் பெருகும்.

வரலாற்றில் முசோலினி, ஹிட்லர் போன்ற சர்வாதிகார ஆட்சிகள் வீழ்ந்ததைப்போல, மக்களின் ஜனநாயக எழுச்சியால் இந்த ஆட்சிக்கும் முற்றுப்புள்ளி வைப்போம் என்று இக்கூட்டத்தில் உறுதியேற்போம்!"

இவ்வாறு பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. பேசினார்.

இக்கூட்டங்களில் சென்னை மாநகராட்சி டாக்டர் பூங்கோதை ஆலடி அருணா, ப.தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், ப. ரங்கநாதன், கே.எஸ். ரவிச்சந்திரன், இரா.நரேந்திரன், மருதுகணேஷ், டாக்டர் ஏ.பி. பூர்ணிமா, பி.கே. மூர்த்தி, எம். விஜயகுமார், கே. சந்துரு, சி. மகேஷ்குமார், கே.எஸ். எம். நாதன், என் பி எம் ஷேக் அப்துல்லா ராஜேஷ் ஜெயின் ஆர்.வரதன்.

மாவட்டக் கழக நிர்வாகிகள் கோ.ஏகப்பன். தேவ ஜவகர், ஜி.எம்.தேவன், புனிதவதி எத்திராஜன், இசட் ஆசாத், வி தயாளன், எஸ் ஆர் கமலக்கண்ணன், பகுதிக் கழகச் செயலாளர்கள் செ. தமிழ் வேந்தன், எம். சாமிக் கண்ணு, சொ. வேலு, வி. சுதாகர், எஸ். ராஜசேகர், எஸ். முரளி, கூ. பீ. ஜெயின், வே. வாசு, ஐ.சி. எட். வ. முரளிதரன், டி.எஸ். பி. ராஜகோபால், எம்.டி. ஆர். நாகராஜ், அ. முருகன். நேதாஜி யு கணேசன், சர்வ ஜெயதாஸ் நரேந்திரன், ஜி. துக்காராம், தி.மு.தனியரசு, வை.ம.அருள்ராசன்,

எ.வி. ஆறுமுகம், புழல். எம். நாராயணன், புழல். வே. கருணாகரன், C. அற்புதராஜ், ஜி.தயாளன், R.D.சுகுமார், பொதுக்குழு உறுப்பினர்கள் சாவித்திரி வீரராகவன், டி.வி. செம்மொழி, கோ. மணி, அ.நிர்மலாதேவி, சரிதா மகேஷ் குமார், ரமேஷ் (எ) நீலகண்டன், எம். இப்ராஹிம் கனி, இரா. கலைச்செல்வி நா. சண்முகம், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், கே. வினோத், எஸ். தனசேகர், பா. ஜெகதீஷ், பி. ஸ்ரீராமலு, நா. ரஞ்சித் விஜயாலயன், ஜி. தாமோதரன், எல். பி.எஃப். மோகன், து. ஆயிரம், இரா. வீரமணி, கு. கிருஷ்ணமூர்த்தி, பி. விஜயகுமார், பா. பிரதீப்குமார், எம். விநாயகம், எல். சம்பத்குமார், எம். பெரோஸ்கான், கா. ராஜ்முகமது, ம. அசோக்குமார், ராஜேஸ்வரி ஸ்ரீதர், டாக்டர் ஜி. சாந்தகுமாரி, சர்மிளா காந்தி ஆனந்தி, பவித்ரா நரேஷ் குமார், வேளாங்கண்ணி, லட்சுமிவேலு, விமலா, கோ.சதீஷ் உள்ளிட்டோரும், மேலும் பகுதிக் கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், கழக முன்னோடிகள் மற்றும் கழகச் செயல்வீரர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

இறுதியாக, ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற அனைவருக்கும் பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. நன்றி தெரிவித்தார். தொடர்ந்து கண்டன முழக்கங்களுடன் ஆர்ப்பாட்டம் நிறைவடைந்தது.



திருவள்ளூரில் ஒருங்கிணைந்த திருவள்ளூர் மாவட்ட தி.மு.க. மகளிர் அணி சார்பில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில், தலைமை கழக பிரதிநிதிகள் முனைவர் எஸ்.ஆர். கிருத்திகா, நளினி சாரங்கன் உள்ளிட 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மகளிர் பெருந்திரளாகப் பங்கேற்று கண்டன முழக்கங்களை எழுப்பினர். ஆர்ப்பாட்டத்தில் மாவட்டச் செயலாளர்கள் முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், திருத்தணி எஸ்.சந்திரன், வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ்ராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வி.ஜி.ராஜேந்திரன், ஆ.கிருஷ்ணசாமி, கே. ஜெ.ரமேஷ், ஜெ.மூர்த்தி, கே.திராவிடபக்தன், மா.இராஜி, மு.பகலவன், நகரச் செயலாளர் சி.சு. ரவிச்சந்திரன், நகர்மன்றத் தலைவர் உதயமலர் பாண்டியன், மாவட்ட மகளிர் அணி நிர்வாகிகள் சரஸ்வதி சந்திரசேகர், ஜி.கோவிந்தம்மாள், தேசராணி, ஜெயலலிதா சசிதரன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

செஞ்சியில் இலவச கண் சிகிச்சை முகாம்!

செஞ்சி மஸ்தான் கண் கண்ணாடி வழங்கினார்!

செஞ்சி, நவ. 1- விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அடுத்த வல்லம் வட்டார வளமைய வளாகத்தில் பாரத் மித்ரன் சமூக பொருளாதார மேம்பாட்டு அறக்கட்டளை, புதுச்சேரி அரவிந்த் கண் மருத்துவமனை மற்றும் சின்ன நெற்குணம் ஷிவானி கல்வி அறக்கட்டளையின் முதியோர் இல்லம் சார்பில் மாபெரும் இலவச கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது.

பாரத் மித்ரன் அறக்கட்டளை நிறுவனர் முருகவேல், ஷிவானி கல்வி அறக்கட்டளை நிறுவனர் தமிழ்மொழி, மாநில ஒருங்கிணைப்பாளர் அகலூர் ஜோலார்தாஸ் ஏற்பாட்டில் நடைபெற்ற முகாமை விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார்.

முகாமில் கண்புரை, சர்க்கரை நோய் கண் பாதிப்பு, கண் அழுத்த நோய், குழந்தைகள் கண் நோய், கிட்டப்பார்வை, தூரப்பார்வை, வெள்ளெழுத்து உள்ளிட்ட பரிசோதனைகள் செய்யப்பட்டு ஆலோசனை வழங்கப் பட்டது.

இதைத்தொடர்ந்து செஞ்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முகாமில் பரிசோதனை செய்து கொண்ட 50க்கும் மேற்பட்டோருக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் கண் கண்ணாடிகளை விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பாரத் மித்ரன் அறக்கட்டளையின் மாநில ஒருங்கிணைப்பாளர் அகலூர் ஜோலா தாஸ், கிராம நிர்வாக அலுவலர் லட்சுமணன், மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் ஆடிட்டர் பிரகாஷ், தொண்டரணி பாஷா உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்ய்யா; "எங்கள் ஆட்சியில் எந்தத் துறையிலும் ஒரு ரூபாய் கூட லஞ்சம் வாங்குறதில்லை" என்று கல்வி அமைச்சர் போற இடங்களில் எல்லாம் பேட்டி தர்றாரே! கேள்விப்பட்டியா!

போண்டி : **ஆமாய்யா; கேள்விப்பட்டேன். இன்னிக்கு ஒரு செய்தி வந்திருக்குது. திருச்சி மாவட்டத்திலே கல்வி அதிகாரிகள் லட்சக்கணக்கில் பணத்தை வாங்கிட்டு, சொகுசா இருக்கிற ஆசிரியர்களுக்கு பணி நிரவல் மற்றும் மாற்றுப் பணி தராம இருக்காங்கன்னு. இதுக்கு அந்த அமைச்சர் என்ன சொல்லப் போறார்?**

ஒழுங்கு நடவடிக்கை

தலைமைக் கழக அறிவிப்பு!

தென்காசி வடக்கு மாவட்டம், மேலநீலிதநல்லூர் மேற்கு ஒன்றியம், சேர்ந்தமரம் கிளைச் செயலாளர் பி.முருகன் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (suspension) வைக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்" **துரைமுருகன்**
சென்னை 18. பொதுச் செயலாளர்
நாள் :31.10.2026 தி.மு.க.

ஒழுங்கு நடவடிக்கை

தலைமைக் கழக அறிவிப்பு!

காரைக்குடி போக்குவரத்துக் கழக தொ.மு.ச நிர்வாகிகளான எம்.பச்சமால் மற்றும் வி.முருகன் ஆகியோர் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (suspension) வைக்கப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்" **துரைமுருகன்**
சென்னை 18. பொதுச் செயலாளர்
நாள் :31.10.2026 தி.மு.க.

சிந்திக்கத் தூண்டிய திராவிட எழுத்துகள்!

அறநெறி காத்த அரசர்கள்!



சாமி சிதம்பரனார்

பண்டைத் தமிழ் மன்னர்களிலே பலர் அறநெறி தவறாமல் அரசாண்டு வந்தனர். அக்காலத்திலே நீதி மன்றங்கள் இருந்தன. நீதிமன்றத்தை 'அறங்கூறு அவையம்' என்று கூறுகின்றது பத்துப்பாட்டு. நீதிபதிகளின் நேர்மை, அவர்கள் நீதி வழங்கும் முறை இவைகளைத் தெளிவாக அதிலே காணலாம்.

பத்துப்பாட்டிலே உள்ள மதுரைக் காஞ்சி மாங்குடி மருதனாரால் பாடப் பட்டது. பாண்டியன் நெடுஞ்செழியன் அப்பாட்டின் தலைவன். அதிலே நீதி மன்றத்தைப் பற்றிக் கூறப்படும் பகுதி நமக்கு வியப்பைத் தருகின்றது. அத்தகைய நீதிபதிகள், நீதிமுறை, நீதிமன்றம் இக்காலத்தில் இருக்கின்றனவா என்ற ஐயம் பிறக்கின்றது.

"பயம், துன்பம், ஆசை இவைகளை நீக்கியவர்கள்; ஒரு பக்கத்தாரிடம் சினமும், மற்றொரு பக்கத்தாரிடம் மகிழ்ச்சியும் காட்டாதவர்கள்; தம்மை நடுநிலையிலேயே நிறுத்திக் கொண்டவர்கள்; துலாக்கோலைப் போல் நடுநிலையிலே நிற்பவர்கள்; சிறந்த ஒழுக்கம் உள்ளவர்கள்: இத்தகையவர்கள் நீதிபதிகளாக அமர்ந்திருந்து நீதி வழங்கும் அறம் கூறும் அவையம்.

நீதிபதிகள் உண்மையைக் கண்டறிந்து நீதி வழங்குவதில் அஞ்சக்கூடாது. பெருங்குற்றத்திற்குக் கடுந்தண்டனை விதிக்கும் நிலை ஏற்படும்போதும் துன்புறக்கூடாது. அவர்கள் பேராசை பிடித்தவர்களாக இருக்கக்கூடாது; போதும் என்ற மனம் படைத்தவர்களாயிருத்தல் வேண்டும்; அளவு கடந்த ஆசையுள்ள நீதிபதிகள் தங்கள் ஆசையை நிறை வேற்றிக் கொள்ளும் பொருட்டு அறத்தை அழிக்கவும் செய்வார்கள்.

வழக்கிடுவோரில் ஒருவர் உறவினராயிருக்கலாம்; அல்லது நண்பராயிருக்கலாம்; மற்றொருவர் தமக்கோ, தம் குடும்பத் திற்கோ பகைவராயிருக்கலாம்; நீதிபதியாக இருப்பவர்கள் இவற்றைச் சிறிதும் மனத்தில் எண்ணாமல் மறந்துவிட வேண்டும். இருவரையும் சமமாகக் கருதி நீதி வழங்க வேண்டும். 'செற்றமும் உவகையும் செய்யாது காத்து' என்ற வரி இவ்வுண்மையை உணர்த்துகின்றது.

ஒழுக்கம் உள்ளவர்களே நீதிபதிக்குத் தகுதியுள்ளவர்கள். ஒழுக்கம் அற்றவர்களால் நீதி நிலைகுலையும். ஒரு நாட்டில் உள்ள குடிமக்கள் அனைவரையும் அரசாங்கம் ஒத்த நிலையிலேயே கருத வேண்டும்; ஒத்த நீதியே வழங்க வேண்டும். சாதிக்கொரு சட்டம், மதத்துக்கொரு சட்டம், சாதிக்கு ஏற்றவாறு நீதி, மதத்திற்கேற்ற வாறு நீதி என்று வழங்கும் முறை அறத்தை அடிப்படையாகக்கொண்டிருக்க முடியாது. மக்கள் அனைவரையும் மக்களாகவே மதித்து நீதி வழங்குவதே சிறந்ததாகும். 'மக்களாட்சி' என்று சொல்லுகின்ற இக்காலத்திலும் இம்முறை ஏற்படவில்லை.

பண்டைக் காலத்தில், உண்மையான குற்றவாளியைக் கண்டறிந்து தண்டனை வழங்கினர். குற்றமற்றவர்களுக்குத் துன்பம் உண்டானால் பாதுகாத்தனர். சாட்சியளிப்போரைக்கொண்டுமட்டும்ஒருவழக்கிலேதீர்ப்பளிக்கமாட்டார்கள். நீதிபதிகளும் தங்கள் நுண்ணறிவைக் கொண்டு குற்றம் யார் பக்கத்தில் என்பதைக் கண்டறிவார்கள். மாறுவேடம் பூண்டு சென்றுகூட 'குற்றவாளிகள் யார்? குற்றமற்றவர்கள் யார்?' என்பதைத் தெரிந்துகொண்டு நீதி வழங்குவார்கள்.

"பொய்க்காரி புகல்வோன் ஒரு மரத்தடியில் நின்றால் அம்மரம் பட்டுப்போகும், அவன் குடும்பம் பாழாகும், அவன் செல்வம் பாழாகும். அவன் மீளா நரகுக்கு ஆளாவான்" என்றெல்லாம் பொய்க்காரி கூறுவோரைப் பற்றிப் பண்டை நூல்களில் கூறப்பட்டிருக்கின்றன. ஆதலால் பொய்க்காரி புகல அஞ்சினர். ஆயினும், தன்னலம் காரணமாகப் பொய்க்காரி புகல்வோர் சிலரும் இருந்திருக்கத்தான் வேண்டும். பொய்ச்சாட்சி சொல்வோர் அடையும் நிலையைப்பற்றிக் கூறியிருப்பதைக் கொண்டே அத்தகையோரும் இருந்தனர் என்று எண்ண இடம் தருகின்றது. ஆகையால், நீதிபதிகள் முழுவதும் சாட்சிகளையே நம்பித் தீர்ப்புக் கூறாமல் உண்மையைக் கண்டறிய முயன்றனர். மதுரைக்காஞ்சியில் கூறிய தகுதியுள்ள நீதிபதிகளால்தான் துலாக்கோல்போல் நின்று நீதி வழங்க முடியும்.

இக்காலத்தில் உள்ள நீதிமுறை முன்காலத்து நீதிமுறைகளுக்கு முரணானது. உண்மையின் மேல் நீதி வழங்க முடியாது; சட்டத்தின்மேல்தான் நீதி வழங்க முடியும். இக்காலச் சட்டப்படி, உண்மையான கொலையாளி தப்பித்துக்கொள்ள முடியும்; ஒரு பாவமும் அறியாத அப்பாவி கொலையாளியாகித் தூக்குத்தண்டனை பெறமுடியும். கொலை செய்ததை நேரே கண்டதாகச் சாட்சிகள் இல்லாவிட்டால் கொலையாளி விடுதலை பெற்றுவிடுவான். குற்றமற்ற ஒருவனைப்பற்றி, 'இவன் தான் கொலை செய்தான்; அதை நாங்கள் கண்ணால் கண்டோம்' என்று கூறும் சாட்சிகள் இருந்தால், அவன் கொலையாளியாகிவிடுவான். நீதிபதிக்கு, யார் குற்றவாளி, யார் குற்றமற்றவர் என்று தெரிந்தாலும்கூட அவர் தன் மனச்சாட்சியின்படி நீதி வழங்க முடியாது. சட்டத்தின் நெறியைப் பற்றியே நீதி வழங்கவேண்டும். சட்டம் சாட்சிகளையும், சாட்சியங்களையும் அடிப்படையாகக் கொண்டதாகும்.

சுருக்கமாகக் கூறினால், பண்டைக் காலத்தில் உண்மையின்படி நீதி வழங்கப் பட்டது; இக்காலத்தில் சட்டத்தின் வழி நீதி வழங்கப்படுகின்றது. பண்டைக் காலத்தில் உண்மையை மறைத்துவிட முடியாது; இக்காலத்தில் உண்மையை மறைத்துவிடமுடியும். இதனால் இக்காலத்தில் சட்டங்களும் நீதிகளும் வலுத்தவர்களுக்கே பெரும்பாலும் துணை செய்யக்கூடியனவாயிருக்கின்றன; இளைத்தவர்களுக்கு நேர்மையும், நீதியும் கிடைப்பது அவ்வளவு எளிதாக இல்லை. இதுதான் பழங்கால நீதிமுறைக்கும் இன்றுள்ள நீதிமுறைக்கும் உள்ள தலைகீழ் வேற்றுமை.

நேர்மையாக நீதி வழங்கிய மன்னர்களிலே கரிகாற்சோழன் சிறப்பாகப் பாராட்டப்படுகின்றான். அவன் இளம்பருவத்திலேயே நுண்ணறிவு படைத்தவனாயிருந்தான். வழக்குகளின் உண்மையை உணர்ந்து முடிவு கூறுவதில் ஒப்பற்றவனாயிருந்தான்.

பத்துப்பாட்டுள் ஒன்றான பொருநர் ஆற்றுப்படை என்பது கரிகாலன்மீது பாடப் பட்டது. அதைப் பாடிய ஆசிரியர் முடத்தாமக் கண்ணியார். இவர் அவனைப்பற்றிய வரலாற்று நிகழ்ச்சி ஒன்றை எடுத்துக்காட்டியிருக்கின்றார்.

'கரிகாற் சோழன் அரசாட்சி செய்த காலத்தில் இரண்டு முதியவர்களுக்குள் ஏதோ வழக்கு ஏற்பட்டது. அவ்வழக்கை அவர்களால் பேசித் தீர்த்துக்கொள்ள முடியவில்லை. கரிகாலனிடம் வழக்கைக் கூறி நீதி பெறலாம் என்று நினைத்து அவனிடம் அணுகினர். தோற்றத்திலே அவன் இளைஞனாயிருப்பதைக் கண்டனர். ஆதலால் இந்த இளைஞனால் நமது வழக்கை ஆராய்ந்து, உண்மையைக் கண்டறிந்து உரைக்க முடியுமோ' என்று ஐயுற்றனர். அவர்களின் ஐயத்தைக் குறிப்பால் அறிந்தான் கரிகாலன். அவர்களுடைய வழக்கை அறநூல் அறிந்த முதிர்ந்த நீதிபதி ஒருவரிடம் மாற்றுவதாக உரைத்தான். அவர்களும் மகிழ்ச்சியோடு இசைந்தனர். பின்னர், அவனே நரைமுடியும் தாடியும் தரித்தவனாய் நீதிமன்றத்திலே வந்து அமர்ந்தான். முதியோர்கள் உரைத்த வழக்கைக் கேட்டான். இருவரும் ஒப்புக்கொள்ளும்படி நீதி வழங்கினான்.'

[பழந்தமிழர் அரசியல் என்ற தொகுப்பில் உள்ள கட்டுரையிலிருந்து..]